JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 1 Witness for Prosecution

STC No. 322/2022 Crime No. - Station -

| | | |
|---|---|---|
| Name | Pw–1– சத்தியபிரியா | Village |
| Father’s Name/Husband’s Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of September 2025 | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரியின் வீட்டு முகவரிக்கு தான் அனுப்பினேன் என்றால். சரிதான். நான் சட்ட அறிவிப்பு எந்த முகவரிக்கு அனுப்பினேன் என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால். வழக்கு தாக்கல் செய்து 3 வருடங்கள் ஆனதால் ஞாபகம் இல்லை. வழக்கின் சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்றால். சரிதான். நான் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு முகவரியில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்றால். எதிரியும். அவரது கணவரும் மற்றும் அவரது மகளும் உள்ளனர். 43, ஆதித்யா ரெசிடென்சி, இரண்டாவது வீதி, VCS நகர், வெள்ளக்கிணறு பிரிவு, GN மில்ஸ், கோயமுத்தூர் என்ற முகவரிக்கு சென்றுள்ளேன் என்றால், நான் சென்றதில்லை. என் கணவர் தான் சென்றுள்ளார்.

நான் எனது கணவர் கூறியதன் அடிப்படையில் தான் எதிரியின் வீட்டு முகவரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால், சரிதான். நான் வருமான வரி கணக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், இதுவரை யாரும் கேட்கவில்லை, அதனால் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணம் கேட்டால் நான் தாக்கல் செய்ய எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. 23.01.2022 அன்று நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.25,00,000/– எனது வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால், நான் மேற்படி பணத்தை கைமாற்று கடனாக கொடுத்ததால் எனது வருமான வரி கணக்கில் காட்டவில்லை. Wholesale வியாபாரம் மார்க்கெட்டில் யார் செய்து வருகிறார் என்றால், நான்தான் செய்து வருகிறேன். Wholesale அடிப்படையில் 23.01.2022–ம் தேதியில் ரூ.25,00,000/– ஐ வைத்திருந்ததற்குண்டான ஆவணம் எதுவும் இல்லை என்றால், நான் நிலம்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.09.19 07:07:25 +0530

வாங்குவதற்காக எனது மாமனார் கொடுத்த பணத்தை வைத்திருந்தேன். அதை தான் கொடுத்தேன். மேற்படி விவரத்தை எனது சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணை எதிலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான்.

Wholesale வியாபாரம் செய்து வருவதற்கு உண்டான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், நான் வியாபாரம் மார்க்கெட்டில் செய்வதால் கொடுக்கும் அளவிற்கு ஆவணம் எதுவும் இல்லை. நான் வியாபாரம் செய்து வரும் குமாரபாளையம் நகராட்சியில் எனது கடைக்கு ஏதேனும் உரிமம் கொடுத்து உள்ளார்களா என்றால், அவ்வாறு எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. நான் எத்தனை வருடங்களாக குமாரபாளையம் நகராட்சி பேருந்து நிலையம் அருகே கடை நடத்தி வருகிறேன் என்றால், சுமார் 40 வருடங்களாக நடத்தி வருகிறேன். எனது கடைக்கு Shed நகராட்சி போட்டுக் கொடுத்தது என்றால், சரிதான்.

எனது கடைக்கு நகராட்சியில் இருந்து ஏதேனும் கடை எண் கொடுத்துள்ளார்களா என்றால், அவ்வாறு ஏதும் கொடுத்ததில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்வது போல் கடை எதுவும் நடத்தி வரவில்லை என்றாலும், அதிலிருந்து வந்த வருமானத்தின் மூலம் எதிரிக்கு கடன் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் பணம் கொடுத்துவிட்டு பணத்தை திருப்பி செலுத்த ஏதேனும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால், ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. கடன் கேட்டதாக சொல்லப்படும் செலுத்த வேண்டும் என நாங்கள் பணத்தை எப்போது திருப்பி செலுத்த வேண்டும் என்று பேசிக் கொள்ளவில்லை என்றால், சரியல்ல. 2 மாதம் என பேசிக்கொண்டோம். பணத்தை எதிரி எங்கு வைத்து கேட்டார் என்றால், எனது வீட்டில் வைத்து கேட்டார்.

எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எனக்கு பணம் இருந்ததற்கு எனது வங்கி கணக்கில் இருந்தது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், நான் பணம் கையில் தான் வைத்திருந்தேன். வங்கியில் வைக்கவில்லை. எனது மாமனார் எனக்கு எப்போது பணம் கொடுத்தார் என்ற தேதி எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால், தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எனது மாமனார் எங்கு குடியிருக்கிறார் என்றால், கவுந்தப்பாடியில் இருக்கிறார். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் என்னை தவிர வேறு சாட்சிகள் யாருக்கும் தெரியாது என்றால், எனக்கும், எனது கணவருக்கும் தெரியும். எனது புகாரில் எனது கணவரின் பெயரை சாட்சி பட்டியலில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான்.

23.01.2022 தேதியன்று எத்தனை மணிக்கு நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால், காலை 11.00 மணி முதல் 12.00 மணிக்குள் கொடுத்திருப்பேன். எனது வீட்டில் 23.01.2022-ம் தேதிய CCTV கேமரா பதிவுகள் உள்ளது என்றால். அன்றைய தேதிகளில் எனது வீட்டில் CCTV கேமரா இல்லை. காசோலையில் கையெழுத்து செய்த மையும், பண விபரம் எழுதியுள்ள மையும் மற்றும் எழுத்துக்களால் எழுதியுள்ள பண

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.19 07:07:38 +0530

விவரம் உள்ள மையும் வெவ்வேறு என்றால், காசோலை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் தான் நிரப்பி தாக்கல் செய்தனர். நான் காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு அன்றைய தினம் தான் எனது பணியாளர்கள் காசோலையை நிரப்பினார்கள் என்றால், சரிதான், எதிரி 2 மாதங்கள் கழித்து கொடுப்பதாக கூறியதனால் அவர்கள் நிரப்பினார்கள். காசோலையில் உள்ள கையொப்பம் எங்கு யாரால் போடப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலைக்கு எவ்வித மறுபயனும் இல்லை என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், நான் எனது சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் கூறுவதுபோல் எதிரி ஒருபோதும் என்னிடம் பணம் கேட்டதில்லை என்றால், சரியல்ல.

எனது கணவரின் பெயர் அன்பழகன் என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரியின் கணவர் சசிதரன் என்பவரும் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டத்தில் வசித்து வரும் எனது கணவர் அன்பழகன் இருவரும் கடந்த 2018 ஆம் ஆண்டு நடத்தி வந்த பதிவு பெறாத சீட்டில் உறுப்பினர்களாக சேர்ந்து ஆளுக்கு தல ஒரு சீட்டு விதம் ரூ.30,00,000/- சீட்டை போட்டு வந்தார்கள் என்றாலும், அந்த சீட்டின் முதல் ஏலம் 15.05.2018 ல் ஆரம்பமானது என்றாலும், எதிரியின் கணவர் சசிதரன் 2018 ஜூலை 15 ஆம் தேதி இரண்டாவது ஏலத்தில் ரூ.30,00,000/- சீட்டை ரூ.18,86,000/- ஏலம் எடுத்தார் என்றாலும், ஏலத்தொகையை எதிரியின் கணவர் பெற்ற சமயம் பின்னிட்ட ஏலங்களுக்கு எதிரியின் கணவரிடமிருந்து ஏலத்தொகைகள் சரிவர பாஸ் ஆவதற்கு ஆதரவாக அவரின் காசோலைகளை எனது கணவர் பெற்றார் என்றாலும், அவற்றின் ஒரு காசோலையை மோசடியாக நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.19 07:07:45 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.